# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.88/2025

### அ.சா.9 (LW 12 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு.மணிகண்டன்** | **தொழில்** | |
| **த/ பெயர்** | ராமன் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **25.08.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. 3ம் எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் செல்லாண்டியம்மன் கோவில் தெருவில் குடியிருந்து வருகிறேன். பைக் கம்பெனியில் வேலை செய்கிறேன். கடந்த 2019ம் ஆண்டு தேதி, மாதம் ஞாபகம் இல்லை, நகர் வடக்கு காவல்நிலையத்தில் என் தம்பி மாசிலாமணி கொலை செய்த விவரமாக காவல்நிலையம் சென்ற போது போலிசார் கையெழுத்து கேட்டார்கள். என்னிடம் காட்டப்படும் எதிரி அஜித்குமார் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி அஜித்குமார் நீதிமன்றத்தில் உள்ளாரா என தெரியவில்லை. போலிசார் கேட்டதால் கையெழுத்து போட்டேன். ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1வது கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.7.** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் அஜித்குமாரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களுக்காக அத்தாட்சியில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். அத்தாட்சியிலுள்ள 1வது கையெழுத்து **அ.த.சா.ஆ.8.** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கையெழுத்தை காவல்நிலையத்தில் வைத்து போட்டேன். அதில் உள்ள விவரங்கள் தெரியாது. 2வது எதிரி ஜெகன் என்ற ஜான் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1வது கையெழுத்து என்னுடையது இல்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி பாரதீய சாட்சிய அதிநீயம் சட்டம் பிரிவு 157 ன் கீழ்குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 2019ல் நான் நெட்டுத் தெருவில் குடியிருந்தேன் என்றால் இல்லை. இறந்து போன மாசி என் சித்தப்பா பையன் ஆவார். மாசிக்கு யாருடனாவது பிரச்சனை

இருந்தது தெரியுமா என்றால் தெரியாது. போலிசார் விசாரணையில் கடந்த 19.03.2019 அன்று மதியம் 02.00 மணி அளவில் நானும் நெட்டுத் தெருவை சேர்ந்த நடராஜன் மகன் சுப்பிரமணியும் எம்.எஸ்.பி பள்ளியின் வடக்கு பக்கம் உள்ள இரயில்வே கேட் அருகே இருந்த போது நகர் வடக்கு காவல்நிலைய ஆய்வாளர் சிதம்பரனார் தெருவை சேர்ந்த செல்வராஜ் மகன் அஜித்குமார், மாலைப்பட்டியை சேர்ந்த சேதுராமன் மகன் ஜெகன் என்ற ஜாக் ஆகியோரை 02.30 மணி அளவில் கைது செய்து எங்கள் முன்பு விசாரித்த போது ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் சுப்பிரமணியும் கையெழுத்திட்டோம் என்றால் சரியல்ல. பின்னர் அதே தேதியில் 03.45 மணிக்கு ஜெகன் என்ற ஜாக் என்பவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் அதில் நானும் சுப்பிரமணியும் கையெழுத்திட்டோம் என்றால் சரியல்ல. அதே தேதியில் மாலை 05.15 மணிக்கு மாலைப்பட்டி ரோட்டில் சுப்புராம் பட்டறை பின்புறம் உள்ள புதரிலிருந்து அஜித்குமார் TN 57–L –3378 என்ற வண்டியின் கவரிலிருந்து எடுத்து ஆஜர் செய்த இரத்தம் பட்ட பேண்ட், சட்டை மற்றும் இரத்தம் பட்ட வீச்சருவாள் ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும், அதே இடத்தில் மாலை 06.00 மணிக்கு ஜெகன் என்ற ஜாக் மேற்படி வண்டியிலிருந்து இரத்தக்கரை படிந்த ஜீன்ஸ் பேண்ட், முழுக்கை சட்டை, இரத்தக்கரை படிந்த இரும்பு கத்தி ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும் பின்னர் அஜித்குமார் அதே இடத்தில் ஆஜர் செய்த TN 57–L –3378 என்ற இருசக்கர வாகனத்தை எங்கள் முன்பு அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும் அதில் நானும் சுப்பிரமணியும்கையெழுத்திட்டதாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எனக்கு தெரிந்த காரணங்களுக்காக உண்மையை மறைத்து எதிரிகள் ஒரே ஏரியாவை சேர்ந்தவர்கள் என்பதால் எதிரிகளை வழக்கிலிருந்து விடுவிப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.</u>

<u>மறு விசாரணை – இல்லை</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.08.25 20:12:31 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.